## Copy of Deposition

### வாக்குமூலம்

### மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

### அசல் வழக்கு எண் : 42/2021

### வாதிதரப்பு சாட்சி:1

பெயர்: சுப்ரமணியன் (வா.சா.1 ) நாள்:15.07.2025

த.பெ:

**2025ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா1 – குறுக்கு விசாரணை (4ம் பிரதிவாதி தரப்பு):-**

இந்த வழக்கில் 1ம் வாதி எனது சகோதரி என்றால் சரிதான். அவரின் சார்பாக நான்தான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி கணேசன் என்ன எதிர்வாதம் செய்தார் என்பதை தெரிந்து கொண்டுதான் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாரிநாயக்கர்- ராஜம்மாள் தம்பதிக்கு மலையப்பநாயக்கர், முத்துசாமி நாயக்கர், நானும் மகன்கள் ஆவோம், ராமாயம்மாள், மலையம்மாள் ஆகியோர்கள் மகள்கள் ஆவோம். வம்சாவழி பட்டியலில் மலையம்மாள் என்பவரது பெயரை விட்டுவிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது சகோதரி மலையம்மாளை விட்டுவிட்டு தாக்கல் செய்ததற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2. மாரிநாயக்கர்- ராஜம்மாள் தம்பதியினரின் சொத்துக்களுக்கு மலையம்மாளும் ஒரு வாரிசுதாரர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் விளம்புகை பாரிகாரம் கேட்பதால் மேற்படி மலையம்மாளையும் ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வாதி சான்றாவணம் 1ல் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாதி சான்றாவணம் 2ல் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். இரண்டு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் தான் அதனுடைய உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

sd/-(G.Pandiarajan)

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.